<u>பேரவை விதி 110 கீழ் வேலூர் விடைத்தாள் திருத்தும் மையத்தில் 10ம் வகுப்பு விடைத்தாள்கள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்த அறிக்கை</u>

மார்ச் 2008 இடைநிலை / மெட்ரிக் பொதுத்தேர்வு முடிந்து விடைத்தாட்கள் திருத்தும் பணி 19–4–2008 முதல் மாநிலம் முழுவதும் 74 மையங்களில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் வெவ்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பாட விடைத்தாட்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 24.4.2008 அன்று இரவு 10.30 மணியளவில் வேலூர் ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி விடைத்தாள் திருத்தும் முகாமில் தீ விபத்து ஏற்பட்டதாக செய்தி பெறப்பட்டதும் அரசுத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை) மற்றும் துணை இயக்குநர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீ விபத்து குறித்து நேரில் பார்வையிட்ட அறிக்கையினை அனுப்பியுள்ளதன் அடிப்படையில் அவை முன் வைக்கிறேன்.

24.4.2008 அன்று இரவு சுமார் 7.00 மணிக்கு விடைத்தாள் திருத்தும்பணி முடிக்கப்பட்டு விடைத்தாள் அறையில் பூட்டி அரக்கு சீலிடப்பட்டு காவல்துறை பாதுகாப்பில் முகாம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரவு சுமார் 9.30 மணியளவில் பூட்டி சீலிடப்பட்ட அறையிலிருந்து புகை வந்ததை காவலில் இருந்த காவலர் மற்றும் பள்ளி இரவுக் காவலர் கவனித்து உடனடியாக தீயணைப்புத்துறைக்கு தகவல் அளித்துள்ளனர். உடனடியாக தீயணைப்பு வீரர்கள் வந்து அறைக் கதவினை சிறிது உடைத்து தண்ணீர் பீச்சி தீயை அணைத்துள்ளனர். 24.4.2008 அன்று மாலை நிலவரப்படி கீழ்க்கண்ட விவரப்படி விடைத்தாள் சேமிக்கும் அறையில் விடைத்தாள்கள் பாடவாரியாக சேமிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் இரண்டாம் தாள் | 22327 |
| 2. | ஆங்கிலம் இரண்டாம் தாள் | 12888 |
| 3. | கணிதம் | 3825 |
| 4. | அறிவியல் | 3146 |
| 5. | சமூக அறிவியல் | 9316 |
| 6. | உருது இரண்டாம் தாள் | 360 |
| 7. | கணிதம் உருது வழி | 16 |
| 8. | அறிவியல் உருது வழி | 132 |
| 9. | சமூக அறிவியல் உருது வழி | 10 |
| | **மொத்தம்** | **52,020** |

எதிர்பாராத வகையில், அங்கு தீவிபத்து ஏற்பட்டாலும், நல்ல வேளையாக, அங்கு வைக்கப்பட்டிருந்த பலபிரிவு விடைத்தாள்களும் எரிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட விடைத்தாள்களில் ஆங்கிலம் இரண்டாம் விடைத்தாள்கள் இருந்த பகுதி மட்டும் தீயினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பிற விடைத்தாள்கள் பாதிக்கப்படவில்லை. தீயினால் பாதிக்கப்பட்ட விடைத்தாட்கள் விழுப்புரம் கல்வி மாவட்டத்தைச் சார்ந்தவையாகும்.

இத்தீவிபத்துக் குறித்து காவல்துறை மற்றும் வல்லுநர்கள் தீவிர விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டுள்ளதால் சேதமடைந்த விடைத்தாட்கள் விவரம் விசாரணைக்கு பின்னர் தெரியவரும் சூழ்நிலை உள்ளது.

இது போன்று எதிர்பாராத நிகழ்வுகள் கடந்த காலங்களில் நடைபெற்றபோது அரசுத் தேர்வுத்துறை வழக்கமாக கடைபிடித்து வரும் நடைமுறைகளைப் பின்பற்றி (Set Procedure) மாணவர்களுக்கு பரிகாரம் வழங்கப்படும் என்றும் பாதிக்கப்பட்ட விடைத்தாளுக்குரிய மாணவர்கள் மீண்டும் தேர்வெழுதும் நிலை ஏற்படாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்**